தினமலர் 8-8-26 பக்கம் - 4 திருச்சி

புதுச்சேரி அரசு

# அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை

## புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமம்

3வது மாடி , புதுச்சேரி வீட்டு வசதி வாரிய வளாகம், அண்ணா நகர், புதுச்சேரி-5.

தொலைபேசி : 0413-2201256 தொலைநகல் : 0413-2203494

# பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம்-அறிவிப்பு

காரைக்கால், திருமலைராயன் பட்டினம், கொம்யூன் பஞ்சாயத்து, கீழ்வாஞ்சூர் கிராமத்தில் அமைந்துள்ள M/s.காரைக்கால் போர்ட் பிரைவேட் லிமிடெட், காரைக்கால் துறைமுகத்தின் முதன்மை திட்ட (Master Plan) மேம்பாட்டின் கீழ் சரக்கு கையாளுவதை விரிவாக்க திட்டமிட்டுள்ளது. இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (EIA) அறிவிப்பின்படி ( எண்.S.O.1533 தேதி : 14.09.2006), இந்த விரிவாக்க திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதிக்கு துறைமுகம் விண்ணப்பித்துள்ளது. சுற்றுச்சூழல் அனுமதியைப் பெறுவதற்கான நடைமுறையின் ஒரு பகுதியாக, பொது மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள பின்வரும் விவரங்களின் படி பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | திட்ட விவரம் | கருத்துக் கேட்பு கூட்டத்தின் தேதி மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1. | M/s. காரைக்கால் போர்ட், பிரைவேட் லிமிடெட், கீழ்வாஞ்சூர் கிராமம், திருமலைராயன் பட்டினம் கொம்யூன், காரைக்கால் - 609 606. | காரைக்கால் துறைமுகத்தன் விரிவான முதன்மை திட்டம், சரக்கு கையாளுதல் விரிவாக்கம் ஆண்டுக்கு 21.5 மல்லியன் டன் அளவிலிருந்து ஆண்டுகள் 100.3 மில்லியன் டன். | 09.09.2026 காலை 10.00 மணி | பல் நோக்கு மண்டபம், கோலகம், டிஆர்.பட்டினம் கொம்யூன் பஞ்சாயத்து காரைக்கால். |

திட்ட உரிமையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை மற்றும் அதன் சாரம்ச அறிக்கையின் நகல்கள் (ஆங்கிலம் மற்றும் தமிழ்) கீழ்கண்ட அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதனை அனைத்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

1. மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காரைக்கால்.
2. ஆணையர் அலுவலகம், திருமலைராயன் பட்டினம், கொம்யூன் பஞ்சாயத்து, காரைக்கால்.
3. உதவி இயக்குநர், தொழில் மற்றும் வணிகத் துறை, கோட்டுச்சேரி, தொழிற்பேட்டை, காரைக்கால்.
4. ஊராட்சி வளர்ச்சி அலுவலர், நேரு நகர், காரைக்கால்.
5. அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை, புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுமம், நெ.469, பாரதியார் சாலை, நேரு நகர், காரைக்கால்.
6. சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், மண்டல அலுவலகம், முதல் மற்றும் இரண்டாம் தளம், கைத்தறி ஏற்றுமதி முன்னேற்ற கழகம், 34, கத்திட்ரல் பூங்கா சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-34.

திட்ட உரிமையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை மற்றும் அதன் சாரம்ச அறிக்கையின் நகல்கள் (ஆங்கிலம் மற்றும் தமிழ்) புதுச்சேரி மாசுக் கட்டுப்பாட்டு குழுமத்தின் **http://dste.py.gov.in/ppcc/KPPL.html** என்ற. இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை பற்றிய கருத்துக்களை, சம்மந்தப்பட்ட பொதுமக்கள், மேற்குறிப்பிட்ட புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமம் முகவரிக்கு எழுத்து மூலமாக அனுப்பிவைக்கலாம் அல்லது கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவிக்கலாம்.

**Dr. N.ரமேஷ்**

உறுப்பினர் செயலாளர், புதுச்சேரி மாசுக் கட்டுப்பாட்டு குழுமம்.

No 151/DIP/AD(Press)/2026-27